# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 16.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)**

**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 17225/SCIC/2023**

திரு.இராமசாமி சண்முகசுந்தரம்
60 பி, வவுனியா இல்லம் மேல்முறையீட்டாளர்
சரோஜினி வீதி, கிருஷ்ணாபுரம்,
சரவணம்பட்டி அஞ்சல் - 641 035
கோயம்புத்தூர்.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) ....... பொதுஅதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
கோயம்புத்தூர் (வடக்கு) -01.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 22.07.2023 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 28.08.2023 |
| 3. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 03.10.2023 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 25.09.2024 |
| 5. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 18.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "கோயம்புத்தூர் மாவட்டத்தில் மொத்தம் எத்தனை சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்படுகின்றன என்ற தகவல், அந்த சார்பதிவாளர் அலுவலகங்களின் முகவரிகள், கதவு எண். தெரு, ஊர், வட்டம், மாவட்டம், அஞ்சல் குறியீட்டு எண். அலுவலக தொலைபேசி எண். ஆகிய தகவல்கள் வழங்கவும்" என்பன போன்று 12 (பன்னிரெண்டு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (16/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி / செல்வி.ம.பிரபாவதி, மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), கோயம்புத்தூர் (வடக்கு) மாவட்டம் அவர்கள் ஆஜரானார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் 22/07/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு அப்போதைய (22/07/2023 தேதிய) பொதுத் தகவல் அலுவலர் திரு.செந்தில்குமார் (தற்போது), மாவட்டப் பதிவாளர் (தணிக்கை), சேலம் (கிழக்கு) மாவட்டம் அவர்கள் எவ்வித தகவலையும் மனுதாரருக்கு வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, மேற்சொன்ன திரு.செந்தில்குமார் மீது பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், மேற்சொன்ன முன்னாள் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து காரண விளக்கத்தைப் பெற்று, அதனை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க பணிக்கப்படுகிறார்.**

**3. இன்றைய விசாரணையின் போது, பொதுத் தகவல் அலுவலர் 25/09/2024 தேதியிட்டு, இனவாரியான தகவல்களை மனுதாரருக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், அத்தகவல் தனக்கு கிடைக்கப் பெற்றதாக ஒப்புதல் அளித்ததோடு, அதில் இனங்கள் 2,4,5,7,8,9,10 ஆகியவற்றிற்கான தகவல் சரியானதாக இல்லை என்றார். மேற்சொன்ன 25/09/2024 தேதியிட்ட தகவலை ஆணையம் ஒவ்வொன்றாகப் பரிசீலனை செய்கையில் அவற்றில், இனங்கள் 2 மற்றும் 10-க்கு திருத்திய தகவலை அளிக்க வேண்டும். இனங்கள் 5 மற்றும் 9-ல் இனம்-5-க்கு மனுதாரர் ஆவண எண்.1350/1945-க்கான நகலையும், அந்த ஆவணம் தொடர்பான வில்லங்கச் சான்றிதழ் மற்றும் இனம்-9-க்கு சார்பதிவாளர் அலுவலக விவரங்கள் ஆகியவற்றை மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர், கோயம்புத்தூர் (வடக்கு) மாவட்டம், அவர்களிடம் நேரில் சென்று வழங்க வேண்டுமென்றும், அதன் பின்னர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர், கோயம்புத்தூர் (வடக்கு) மாவட்டம் அவர்கள் மனுதாரருக்கு, இனங்கள் 5 மற்றும் 9-க்கு சரியான தகவல்களை, மனுதாரரிடமிருந்து தகவல்களை / ஆவணங்களின் நகல்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் ஒரு மாத காலத்திற்குள் மனுதாரருக்கு இனங்கள் 2,5,9 மற்றும் 10-க்கான தகவல்களை / நகல்களை ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர் மனுதாரருக்கு அனுப்பி**

**வைத்த தகவல்களின் நகல் மற்றும் மனுதாரரிடமிருந்து பெறக்கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. மற்ற இனங்களுக்கான தகவல்களை ஆணையம் பரிசீலனை செய்கையில், ஆவணங்களின்படியான உரிய தகவல் அளிக்கப்பட்டிருப்பதாகப் பதிவு செய்து ஏற்கிறது. எனவே, இத்துடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 17225/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
கோயம்புத்தூர் (வடக்கு) -01.

2. திரு.செந்தில்குமார்
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
(தற்போது) மாவட்டப் பதிவாளர் (தணிக்கை)
சேலம் (கிழக்கு) மாவட்டம்

**மேல்முறையீட்டாளர்**

திரு.இராமசாமி சண்முகசுந்தரம்
60 பி, வவுனியா இல்லம்
சரோஜினி வீதி, கிருஷ்ணாபுரம்,
சரவணம்பட்டி அஞ்சல் - 641 035
கோயம்புத்தூர்.

நகல்.
1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை-28.

2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35 (for follow up)
RG/PC